2007 ஏப்ரல் 24]

பெயர்களை எழுதிக் கொடுத்தால், அவற்றைத் தூர் வாருகிற பணி அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா, இல்லையா என்று பார்த்து, அப்படி இல்லாவிட்டாலும் உறுப்பினர் கேட்டதற்காக அரசு ஒன்றிரண்டைச் சேர்த்து, எடுத்துப் பணி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

124—

சொந்தக் கட்டடம்

***132—திரு. கு. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, ஒடுக்கத்தூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, ஒடுக்கத்தூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன்.

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஒடுக்கத்தூரில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகம், போதுமான அளவுக்கு அடிப்படை வசதிகள்கூட இல்லாத ஒரு வாடகைக் கட்டடமாக இருப்பதாலும், அங்கு அடிப்படை வசதிகளைக்கொண்ட வேறு ஒரு கட்டடம் கிடைக்காத காரணத்தாலும், அந்தப் பகுதியில் மலைவாழ் மக்கள் அதிகமாக

வசிக்கின்ற காரணத்தாலேயும் முன்னுரிமையின் அடிப்படையிலே நடப்பு நிதியாண்டிலேயே ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த முறை அமைச்சராக இருந்தவர்கள். அவர் அந்தக் காலத்தில் செய்து இருக்கலாம். அப்போது வேண்டுமென்றே விட்டுவிட்டாரா என்று தெரியவில்லை. இப்போது அந்த வாடகைக் கட்டடத்தின் அருகில் அரசுக்குச் சொந்தமான இடம் இருந்தாலும் அல்லது தானமாகக் கொடுத்தாலும் அரசு இக்கோரிக்கையை விதிகளுக்கேற்ப பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டுரங்கன்.

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே அரசினுடைய புறம்போக்கு நிலத்தைக் கையகப்படுத்தி, நில மாற்றம் செய்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருந்த காரணத்தால் அந்தப் பணி விரைவாக முடிக்கப்படாத நிலையிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே சொந்தக் கட்டடம் கட்டப்படவில்லை என்பதையும், தற்போது அந்த அரசுப் புறம்போக்கு நிலம், நில மாற்றம் செய்யப்பட்டுப் பத்திரப் பதிவுத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தாலே, இதைச் சிறப்பு நிகழ்வாகக் கருதி, அங்கே நடப்பு நிதியாண்டிலே கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதையும், தமிழகத்தில் எவ்வளவு சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன என்பதையும், எத்தனை அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்குகின்றன என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

2007 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன் அதையெல்லாம் கேட்கிறீர்கள்? உங்கள் துணைக் கேள்வியை main question-ல் மட்டும் கேளுங்கள். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நிலத்தைக் கையகப்படுத்தியதால் காலதாமதம் ஆகிவிட்டது என்று ஒப்புக் கொண்டுள்ளார். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் காலத்திலே செய்ய முடியாததை இப்போது அந்த இடத்தில் நிலத்தைக் கையகப்படுத்தியிருந்தால் நிதிநிலைக்கேற்பக் கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலூர் மாவட்டத்தில் 45 பதிவுத் துறை அலுவலகங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றில் 25 அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்குகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள 20 இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் சார் பதிவாளர் அலுவலகம் இல்லை. கீழ்ப் பகுதிக்குத்தான் வர வேண்டும். ஆகவே, வால்பாறையிலே ஒரு சார் பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கட்டடம் கேட்கிறார்கள். அலுவலகமே அங்கே இல்லை. புதிய அலுவலகம் திறந்த பிறகு கட்டடம் கட்டுவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.